## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

உள்நாட்டு மருத்துவப் பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம்

செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

### 1.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11(அ) பரிவு | உரிய அமைச்சரினதும் நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினதும் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் படாமல் நிறுவனத்தால் 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு உழைக்கப்பட்ட ரூபா 1,806,873 தொகை | இந்த நிலையான வைப்புக்களை ஆரம்பிப்பதற்காக அங்காரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்திற்கு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் கல்வி அமைச்சின் மூலம் | நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அங்கீகாரத்தைப் பெற்று முதலீடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | திறைசேரிக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 8,969,778 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,636,838 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 11,606,616 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு அரசாங்கத்தின் மீண்டெழும் மானியம் ரூபா 6,000,000 இனால் குறைவடைந்தமை மற்றும் உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைச் செலவினம் ரூபா 3,435,390 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பட்டப்பின் பாட நெறிக்காக நியமிக்கப்பட்ட பகிரங்க கல்வி சபையின் கீழ் எந்தவொரு பாடநெறிக்காகவும் அங்கீகாரம் வழங்கப்படாமையின் காரணமாக பாடநெறியை நடாத்துவதற்கு முடியாதிருந்தது. | நிறுவனத்தால் இது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய சகல நடவடிக்கைகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்துள்ள போதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் இது வரை உரிய அங்கீகாரம் வழங்கப்படவில்லை. | பாட நெறிக்காக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்ட 102 செயற்பாடுகளில் பயிற்சியளித்தல், ஆராய்ச்சி மற்றும் கணனி முறைமை அபிவிருத்தி செய்வதற்கான 34 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நிறுவனம் தவறியிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் போது நிறுவனத்திற்கு மூலதனம் அல்லது மீண்டெழும் செலவினமாக எந்தவொரு தொகையும் கிடைக்கப் பெறாமையினால் புதிய பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம் வழங்காமை, ஊழியர் பற்றாக்குறை மற்றும் புதிய பதவியணியினரைச் சேர்ப்பதற்கு முகாமைத்துவ திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைக்கப்பெறாமை இதற்கான காரணமாக இருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பணிகளை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2019 ஆம் ஆண்டு முதல் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டிற்காக மாணவர் | பாடப் பரிந்துரை தயாரித்தலை உள்ளடக்கிய ஆரம்ப பணிகள் கணிசமாக நிறைவேற்ற வேண்டியிருந்தமையால் 2019 ஆம் ஆண்டின் போது | நிறுவனம் தாபிக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக |

| | | |
|---|---|---|
| சேர்க்கப்படாமல் ரூபா 17,853,054 செலவிடப்பட்டிருந்தது. 2020 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது முறையே 20 மாணவர்களும், 12 மாணவர்களும் சேர்க்கப்பட்டு கூட்டுமொத்தமாக ரூபா 63,466,524 செலவிடப்பட்டிருந்தது. 2019 முதல் 2023 கால எல்லைக்குரிய 05 கல்வி ஆண்டுகளில், 03 கல்வி ஆண்டுகளின் போது மாணவர்கள் சேர்க்காமையின் காரணமாக ஒரு மாணவருக்கான கிரயம் ரூபா 676,843 முதல் ரூபா 1,130,204 வரையான வீச்சினைக் கொண்டிருந்தது. | மாணவர்கள் சேர்க்கப்படவில்லை. ஆயுர் வேத அமைச்சு அல்லது ஆயுர் வேத திணைக்களத்தால் விசேட நிபுணத்துவ தன்மையின் கீழ் பதவிகள் தனித்தனியாக காண்பித்து நிறுவனத்திற்கு அனுப்பாதிருந்தமை, பயிற்சியாளர்களில் ஒரு பகுதியினர் பயிற்சி நடவடிக்கைகளிலிருந்து விலகியமை, சில பாட நெறிகளுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம் இன்னும் கிடைக்கப் பெறாமை, முன்னர் காணப்பட்ட கொவிட் தொற்று நோயினால் நிறுவனம் மூடப்பட்டமை போன்ற காரணங்களினால் 2021 ஆம் ஆண்டின் போது மாணவர்களை சேர்ப்பதற்கு முடியாதிருந்தது. | போதியளவான மாணவர் தரப்பினரை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 நிதியத்தின் குறைவான பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டின் போது உயர் கல்வி அமைச்சிலிருந்து கிடைக்கப் பெற்ற ரூபா 7,000,000 மூலதன நிதி ஏற்பாடு 2023 திசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பயன்படுத்தப்படாமல் சேமிப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. | நிறுவனத்திற்கு அத்தியவசியமான மோட்டார் வாகனத்தைக் கொள்வனவு செய்வதற்கு இந்தப் பணம் நிறுத்திவைக்கப்பட்ட போதும் வாகன இறக்குமதி அரசாங்கத்தால் நிறுத்தப்பட்டதன் காரணமாக நிறுவனத்திற்கு அத்தியவசியமான மூலதன வடிவிலான செலவினங்களுக்காக 2024 ஆம் ஆண்டின் போது பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நிதியத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் வேண்டும். |